<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். முதல் பிரதிவாதி தன்ராஜ் என் சகோதரர், அவர் இறந்துபோனதால் 3 முதல் 5 பிரதிவாதிகளை வழக்கில் சேர்த்துள்ளேன். பாஸ்கர் தற்போது உயிருடன் இருக்கிறார். வாசுதேவன், தனலட்சுமி ஆகியோரின் வாரிசுகள் என்பதை காட்டக்கூடிய வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாசுதேவனின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் B.E., Electronics and Communication படித்துள்ளேன். நான் இஸ்ரோவில் வேலை பார்த்துவிட்டு பணி ஒய்வு பெற்றுவிட்டேன். 1985-ல் திருமணம் நடைபெற்றது. அதன் பிறகு 27 வருடங்கள் பெங்களூரிலும், 13 வருடம் பாம்பேவிலும் வசித்து வந்தேன். நான் தற்போது பெங்களூரில் வசித்து வருகிறேன். 2014ல் இருந்து தற்போது வரை பெங்களூரில் வசித்து வருகிறேன். எனக்கு கிருஷ்ணராஜபுர ஹப்லியில் வீடு வாங்கி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் தான செட்டில்மெண்ட் மூலமாக வீட்டு மனை எனக்கு என் அம்மா கொடுத்தார்.

3. மேற்படி நிலம் எழுதி கொடுத்ததை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். தான செட்டில்மெண்ட் கொடுக்கப்பட்ட நிலத்தின் மதிப்பு எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். மேற்படி ஆவணத்தை தற்போது வரை தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் அந்த ஆவணங்களை கொடுத்து விட்டேன். 2005-ல் எனது அம்மா எனக்கு கொடுத்த தான செட்டில்மெண்ட் தொடர்புடைய ஆவணம் என்னுடைய ஆவணங்கள் பட்டியலில் இல்லை.

4. என்னுடைய சகோதரர் தனராஜ் மற்றும் பாஸ்கரன் சார்பாக இருதரப்பட்ட பதிலுரை தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். படித்து பார்த்தேன். கிருஷ்ணராஜபுர ஹப்லியில் என் பெயருக்கு கொடுக்கப்பட்ட நிலம் எனக்கு பாகப்பிரிவினை செய்து கொடுப்பதற்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினைக்காக

அந்த நிலம் கொடுக்கப்படவில்லை என்று எனது பிரமாண வாக்குமூலத்திலோ, பதிலுரையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரர்கள், எனது அம்மா ஒரு உயில் வைத்திருப்பதாக அவர்களுடைய எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளதற்கு பதில் ஏதும் கூறவில்லை என்றால் சரியல்ல, அவை போலியாக தயாரிக்கப்பட்டவை என்று சொல்லியுள்ளேன்.

5. என்னுடய பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 5-ல் என் தகப்பனார் வாசுதேவனுக்கு பாத்தியப்பட்ட இரண்டு புளு மெட்டல்ஸ் நிறுவனங்களில் ஒன்றை தனராஜ் பெயருக்கும், மற்றொன்றை பாஸ்கரின் மனைவி சுசித்ராவிற்கும் எழுதி வைத்திருப்பதாக சொல்லியுள்ளதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தயாரின் இறப்பில் கலந்து கொள்ளக்கூடாது என்று யாரும் என்னை தடுக்கவில்லை என்றால் சரிதான்.

6. 20.09.2014-ல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அசௌகரியத்தை ஏற்படுத்தியதாக புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரின் நகல் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாதான். 20.09.2014க்கு முன் அல்லது அதற்கு பின்னதாக பாகம் கேட்டு நான் எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாய்மொழியாகவும் போனில் கேட்டேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

7. இந்த வழக்கில் ஒரே ஒரு அட்டவணை சொத்தில் மட்டும் தான் பாகம் கேட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிராதில் 1வது அட்டவணை சொத்து அசையா சொத்தாகும். 2வது அட்டவணை சொத்து தங்க நகைகளை பற்றியதாகும். அந்த தங்க ஆபரணங்கள் யாருடைய வசத்தில் இருக்கிறது என்று சொல்லியுள்ளேனா என்றால் சக்தி பைனான்சில் உள்ள பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்துள்ளதாக சொல்லியுள்ளேன். 20.09.2014க்கு பிறகோ அல்லது முன்னதாகவோ மேற்படி நகைகளில் எனக்கும் பாகம் உள்ளது என்று கூறி மேற்படி பைனான்ஸ் நிறுவனத்திற்கோ, என் சகோதரர்களுக்கோ வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன்.

8. 1வது அட்டவணை சொத்தில ் ரிலையன்ஸ ் டவா ் அமைப்பதற்கும், வாடகைதாரர்களுக்கும் வாடகைக்கு விடப்பட்டு வருமானம் வந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள ் எதுவும ் தாக்கல ் செய்துள்ளேனா என்றால ் தாக்கல ் செய்யவில்லை. வாடகைதாரர்களுக்கு மேற்படி சொத்திற்கு வாரிசாகிய எனக்குரிய பங்கையும், தவறினால் அதை நீதிமன்றத்திலும் செலுத்தி வைக்கவேண்டுமென்று அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. வாடகைதாரர்களை தரப்பினர்களாக வழக்கில் சேர்க்கவில்லை, வாடகைதாரர்களின் விவரங்கள் எதுவும் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

9. என்னுடைய சகோதரர் தனராஜின் வாரிசுகளான 3 முதல் 5 பிரதிவாதிகள் அட்டவணை சொத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லவில்லை. அவர்கள் வாடகையை ஏன் கொடுக்க வேண்டுமென்று சொல்லியுள்ளேன் என்றால் என்னுடைய அம்மாவிடமிருந்து அவர்கள் அதிகம் லாபம் அடைந்ததால் அவ்வாறு சொல்லியுள்ளேன். எந்த வங்கி பாதுகாப்பு பெட்டகத்தில் நகைள் வைக்கப்பட்டிருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் நகைகள் சக்தி பைனான்ஸ் பாதுகாப்பு பெட்டகத்திலும், பணம ் வங்கியின ் பாதுகாப்பு பெட்டகத்திலும் வைக்கப்பட்டிருந்ததாக சொல்லியுள்ளேன். எந்த வங்கி என்றும், எவ்வளவு பணம் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் திருமணத்திற்கு பிறகு எனது பெற்றோர்கள் தனலட்சுமி மற்றும் வாசுதேவன் ஆகியோர்களுடன் சேர்ந்து வசிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி 07.08.2026-க்கு ஒத்தி வைக்கப்படுகிறது)